திரு. சேலம் மு. ஆறுமுகம்: கால்நடை மருத்துவர்கள் கொடிய விலங்குகளுக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். பொது மருத்துவம், பல் மருத்துவம் செய்கிறவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்திற்கும் இவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத் திற்கும் வித்தியாசம் இருப்பது ஏன்? அது நியாயமா? பால் மாடுகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்களை நிர்வகிக்கும் துறை ஒருவரிடமும் பசுப் பராமரிப்புத் துறை ஒருவரிடமும் இருக்கிறது. இரண்டு துறைகளையும் ஒரே அமைச்சரிடம் கொடுக்க அரசு முயற்சிக்குமா? பாலையும் பசுவையும் ஒரே அமைச்சரிடம் கொடுக்க முயற்சிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பால் கொடுக் கிற கால்நடைகளை கொடிய விலங்குகளாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா? தமிழ்நாடு பால்வள நிறுவனத்தில் பணி புரியக்கூடிய மருத்துவர்களுக்கு பணிப் பாதுகாப்பு, தேவையான ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஈட்டுதியம் தர முடிவு எடுத்துவிட்டால் அவர்கள் அங்கேயே பணியாற்ற விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று தெவித்துக் கொள்கிறேன்.

மாயூரம் வட்டத்தில் சிறு தொழில்கள்.

*வினா எண். 730.— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

1976–77-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் சிறுதொழில்களைத் துவங்குவதற்கான உரிமங் கள் எத்தனை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 1976–77-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் சிறு தொழில்களைத் துவங்குவதற்காக வழங்கப்பட்ட சான்றி தழ்களின் எண்ணிக்கை மொத்தம் 36.

Post of head nurse in Kallakurichi Hospital

* Q. No. 731—Thiru Durai Muthusamy: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) Whether the Government Order No. 1127, Public Health, dated 27th April 1945 regarding the appointment of head nurse in Government Hospital is still in practice;

(b) If so, such appointment of a head nurse has been made to the Government Hospital, Kallakurichi, South Arcot district, which has provision for 56 beds;

(c) If not why: and

(d) How long is it remaining without such appointment?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: ஆ, இ & உ, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் ஒரு தலைமைச் செவிலியர் பதவி ஏற்படுத்த அரசு ஆணை எண். 333, சுகாதாரம் நாள் 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24-ம் தேதியில் ஒப்பளிக்கப்பட்டது.

திரு. துரை முத்துசாமி: அரசாணை எண். 1127, தேதி 1945-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் தேதி படி தலைமைச் செவ்லியர் போடப்படுவது அமலில் இருந்தும் அவ்வாறு போடப்படாமல் காலதாமதமாகிக் கொண்டிருந்த தற்குக் காரணம் என்ன? கள்ளக்குறிச்சி மருத்துவ மனையில் ஹெட் நர்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இதைப்போல் தமிழகம் முழுவதும் ஹெட் நர்சுகள் எவ்வளவு பேர் போட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அதிகப்படி பணி இடங்களை ஏற்படுத்த பொதுக் கட்டுப்பாடு உள்ளதால் மருத்துவம் மற்றும் குடும்ப நலத் துறை இயக்குநர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ மனையில் தலைமைச் செவிலியர் பதவி ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை ஏதும் இதற்கு முன்னால் எடுக்கவில்லை. இந்த அரசு வந்த பிறகு அந்தத் தன்மையை உணர்ந்து 50 படுக்கைகளுக்கு ஒரு தலைமைச் செவிலியர் இருக்கவேண்டுமென்ற காரணத்தை முன்னிட்டுத்தான் இன்றைக்கு அங்கு தலைமைச் செவிலியரை நியமிக்க அங்கீகாரத்தை வழங்கி அதற்கான ஆணை 1979-ம் வருடம் பிப்ரவரி திங்கள் 24-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாகப் பொடுவாரானால் பதில் சொல்லப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள பெரிய மருத்துவ மனையிலே ஷிப்டு முறையில் பணியாற்றி வருவதைப்போல் மற்ற மாவட்டங் களிலேயும் உள்ள அரசு மருத்துவ மனைகளிலேயும் நர்ஸ்கள் ஷிப்டு முறையில் பணி ஆற்றச் செய்தால் நோயாளிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, மற்ற மாவட்ட மருத்துவ மனைகளிலேயும் ஷிப்டு முறையைக் கொண்டுவர அரசு முனவருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, பணியாற்றுகின்ற செவிலியர்களை மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல் ஷிப்டு முறையிலே பணியாற்ற வைக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்றாலும் தேவையான அளவிற்கு நமக்கு இன்னும் செவிலியர்கள் பெறவில்லை என்ற காரணத்தால் சில இடங் களிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற நிலைமைகள் இருந்தாலும் அதைச் சீர்படுத்துவதற்கு அரசு வழிவகை செய்துகொண்டிருக்கிறது.

[1979 ஏப்ரல் 19

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மருத்துவ மனை பெரிய மருத்துவ மனையாக இருக்கிறது. அதே நேரத்திலே ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பிட்டல் கடலூரிலே இருப்பதால் அங்கிருந்து 60 மைல் தூரம் செல்லவேண்டுமென்ற நிலமை இருக்கிறது. அருகாமையிலே மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவசர நிமித்தமாக ரத்தம் தேவைப் பட்டால் அங்கே பிளட் பாங்க் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, கள்ளக்குறிச்சி மருத்துவ மனையிலே பிளட் பாங்க் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இப்போது ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

இளையாங்குடி மருத்துவமனைக் கட்டிடம்

* வினா எண். 732—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முகவை மாவட்டம், இளையாங்குடியில் 40 படுக்கைகள்கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்கான டிபாசிட் ரூபாய் ஒரு லட்சம் கட்டி 3 வருடங்கள் ஆகியும் இன்னும் எந்த வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம், எனில், ஏன் வேலை துவக்கப்படவில்லை?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) & (இ) இம்மருத்துவ மனைக்காக ரூ. 3.00 லட்சம் செலவில் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு 1979–80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி புதிய பணித்திட்டமாக அங்கீகரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஒரு ஆண்டுக்கு முனனாடிப் போடப்பட்டது. நாங்கள் டெபாசிட் செய்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டது. வருமா வராதா என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். இந்த அரசு ஆஸ்பத்திரி கட்டுவதற்கு சாங்ஷன் ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால், எப்போது அது ஆரம்பிக்கப்படும் என்பதைச் சொல்லமுடியுமா?